காரைதீவு பிரதேச சபை
அம்பாறை மாவட்டம்

---

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 21 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூன் 06 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 செப்தெம்பர் 21 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து காரைதீவு பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 2 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தும் அவ்வாறு காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பேரேட்டின்படி மீளாய்வாண்டிற்காகச் செலுத்தப்பட்ட வழங்கல் பொருட்களும் தேவைப் பொருட்களும் ரூபா 5,354,548 ஆகக் காணப்பட்டபோதிலும் நிதிக்கூற்றுக்களில் அவை ரூபா 5,340,693 ஆகக் காட்டப்பட்டதினால் செலுத்தப்பட்ட வழங்கல் பொருட்களும் தேவைப் பொருட்களும் ரூபா 13,894 தொகையால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் ரூபா 20,180 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட நீர்ப்பம்பி நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

1.3.3 பெறப்படவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) பிடித்துவைத்தல் வரி ரூபா 271,460 சுமார் 06 வருடகாலமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படாமல் வைப்புக் கணக்குகளில் தொடர்ச்சியாக காட்டப்பட்டுவருகிறது.

(ஆ) தேசத்தை கட்டியெழுப்புதல் வரி ரூபா 10,003 சுமார் 05 வருடகாலமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படாமல் வைப்புக் கணக்குகளில் தொடர்ச்சியாக காட்டப்பட்டுவருகிறது.

(இ) 2008ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக பெறவேண்டியவையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுவரும் பொதுச்சந்தை வாடகை வருமானம் ரூபா 15,000 தொகையை அறவிடுவதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 யூன் 19 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இடமாற்றம் பெற்றுச் சென்ற 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 37,697 கடன் மீதி 09 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையாக காணப்பட்ட போதிலும் அவற்றை சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து அறவிடுவதற்கு 2015 ஜுன் 19 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 1992 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு இறுதி வரை நிலுவையாக உள்ள இறைச்சிக் கடைக் குத்தகை ரூபா 736,640 தொகையை அறவிடுவதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 ஜுன் 19 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 ஆவணச் சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி ரூபா | சான்றுகளின்மை |
|---|---|---|
| காணி கட்டடிடம் | 95,892,768 | நிலையான சொத்துப்பதி வேடுகள்,மற்றும் மெய்மையாய்வு அறிக்கைகள் |
| பொறித்தொதியும் இயந்திரங்களும் | 2,613,470 | |
| நூலக புத்தகங்கள் | 1,471,105 | |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2014 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா 4,383,845 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா 3,795,378 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 588,467 பின்னடைவைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

2.2.1 விளம்பரப் பலகைகளுக்கான கட்டண அறவீடு

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவிற்கமைய சபையினால் வருமானங்களை அறவிடுவதற்காக உபவிதிகளை சட்டமாக்குவதிலுள்ள தாமதத்தின் காரணமாக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் நிறுவனங்களினால் தங்களின் விற்பனைப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்காக நிறுவிய 04 விளம்பரப் பதாதைகளுக்காகவும் தொலைத்தொடர்பு நிறுவனங்களால் நிறுவப்பட்ட 02 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்காகவும் மீளாய்வாண்டிற்காக அறவிடவேண்டிய அண்ணளவாக ரூபா.175,000 தொகையான வருமானத்தை சபை இழக்கவேண்டி ஏற்பட்டது.

2.2.2 வீதவரிகள் மற்றும் வரிகள்

---------------------------------------------

பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் 54 வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ள மற்றும் 5175 குடும்பங்கள் வசிக்கும் காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு இறுதிவரை வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்படாமையினால் வருடாந்தம் அண்ணளவாக ரூபா 180,000 தொகையான வருமானத்தை இழந்துள்ளது.

2.2.3 நீதிமன்ற தண்டப்பணம்

----------------------------------------

வெவ்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதவான் நீதிமன்றத்திடமிருந்து 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய ரூபா.654,965 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து இன்று வரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.2.4 முத்திரைக் கட்டணம்

------------------------------------

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா.2,269,077 தொகை பதிவாளர் நாயகத்திடமிருந்து இன்று வரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 முகாமைத்துவப் பலவீனங்கள்

-------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) குறித்தொதுக்கப்பட்ட விசேட மாகாண அபிவிருத்தி (SDG) உதவித் திட்டத்தின் கீழ் 2012 நவம்பர் 22ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா.754,200 பெறுமதியான பிளாஸ்ரிக் அரைக்கும் இயந்திரமானது உரிய நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாது கணக்காய்வுத் திகதியான 2015 ஜுன் 19 வரை களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் 759 வீதி விளக்குகளை பராமரிப்பதற்காக ரூபா 138,380 தொகைக்கு மின்விளக்குகளும் பொருத்துக்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இம்மின்சாரப் பொருட்களை கொள்வனவு செய்தல், இருப்பு பதிவேடுகளைப் பேணுதல், பொருட்களை வழங்குதல் மற்றும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளை தயாரித்தல் போன்ற அனைத்து நடவடிக்கைகளும் ஒரு உத்தியோகத்தராலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

3.2 ஒப்பந்த நிர்வாகம்

------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) மீளாய்வாண்டின் பிரதேச சபைகளை வலுவூட்டும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் ரூபா 4,000,000 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 1,396,000 தொகை மாத்திரம் சிறுவர் பூங்கா மற்றும் வாகனத் திருத்தத்திற்கு செலவு செய்யப்பட்டு மிகுதிப் பணம் குறித்த தேவைக்கு பயன்படுத்தாது காணப்படுகின்றது. மேலும் இம் மீதிப் பணமானது உள்ளூராட்சி மாகாணசபை அமைச்சின் PL/3/1/47 இலக்க 2015 ஏப்ரல் மாதக் கடிதத்திற்கமைவாக 2015 மே 15க்கு முன்னர் மீண்டும் அமைச்சுக்கு அனுப்ப வேண்டுமென குறிப்பிட்ட போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2015 யூன் 19 வரை திருப்பி அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் சபையின் எல்லைக்குட்பட்ட 03 வீதிகளை கிரவலிட்டு புனரமைப்பதற்காக ரூபா.562,500 தொகைக்கு ஒரு சனசமூக நிலையத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இவ்வீதிகளின் புனரமைப்பு தொடர்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் களப்பரிசோதனை செய்த போது 39.45 Cm பரப்புள்ள பாதைக்கு கிரவல் இட்டு பூரணப்படுத்தப்படாத போதிலும் அவ்வேலை திருப்திகரமாக செய்யப்பட்டதாக சிபார்சு செய்யப்பட்டு ரூபா.49,402 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) தரம் குறைந்த கிரவல் வீதிப்புரனமைப்புக்குப் பயன்படுத்தப்பட்டதனால் பொதுமக்கள் வீதிகளைப் பயன்படுத்துவதில் பல இடையூறுகள் கானப்பட்டன.

(இ) புறநெகும திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட புதிய சபை கட்டிடத்திற்கு நீர்ப்பம்பி பொருத்துதல் தொடர்பாக பின்வருவன விடயங்கள் அவதானிக்கப்படன.

(i) இக் கட்டிடத்திற்காக நீர்ப்பம்பி பொருத்துவதற்கு ரூபா.34,000 தொகை மதிப்பிடப்பட்டிருந்தும் குறித்த கட்டிட ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து இதைப் பொருத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையினால் சபையின் நிதியைப் பயன்படுத்தி ரூபா. 20,180 செலவு செய்து நீர்ப்பம்பி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) குறித்த நீர்ப்பம்பி 2014 ஒக்டோபர் 24 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் அதன் பின்னர் 2014 நவம்பர் 27 ஆம் திகதியே சபையினால் நீர்ப்பம்பி கொள்வனவு தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்திட்டத்திற்குப் பயன்படுத்தும் வாகனங்களுக்காக 18 டயர்கள் ரூபா 740,520 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டமை தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) கூறு விலைகோரும் போது குறிப்பிட்ட டயரின் வியாபாரப் பெயர் மற்றும் பண்டக்குறி என்பன குறிப்பிடப்படாமல் விலைமனு கோரப்பட்டுள்ளது.

(ii) கொள்வனவுத் திகதியில் குறிப்பிட்ட CEAT வகையான 8.25 X 20 அளவு டயர்களின் சந்தை விலையை விட அதிக விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டமையால் சபைக்கு ரூபா 125,625 தொகையினை மேலதிகமாக செலுத்தியிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் விபுலானந்தா பொது நூலகத்திற்கு PSDG நிதி ஒதுக்கீட்டின் ரூபா 300,000 தொகைக்கு புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இக்கொள்வனவு தொடர்பாக பெறப்பட்ட விலைமனுக்கள் பெறுகைக்குழுவின் கூட்டம் ஆரம்பிக்கும் வரையும் விலைமனுப் பெட்டியில் இடப்படாமல் உத்தியோகத்தரிடம் காணப்பட்டிருந்தது.

(ii) இப்புத்தகக் கொள்வனவு தொடர்பாக பெறுகைக்குழுவின் தீர்மானமானது 2014 மே 27 ஆந் திகதி சபையினால் நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும் கொள்வனவுக்காக தெரிவுசெய்யப்பட்ட வழங்குனரின் விலைமனுவானது 2014 மே 28 ஆந் திகதியே சபைக்கு கிடைக்கப்பெற்றமை தபாலக முத்திரை கடித உறையில் பொறிக்கப்பட்டதன் மூலம் புலனாகின்றது.

(iii) புத்தகங்களின் தேவைப்பட்டியல் தயாரிக்கப்படாமல் நூலகரின் சுய விருப்பின்பேரில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

(ஊ) மீளாய்வாண்டின் போது PSDG நிதி ஒதுக்கீட்டின் மூலம் காரைதீவு 01 ஆம் பிரிவு மாதவி வீதியை கொன்கிறிட் வீதியாக மாற்றுவதற்காக ரூபா 870,464 செலவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மேற்படி வீதியின் அகலம் 3 meter ஆக காணப்பட்டிருந்தும் வீதியைச் செப்பனிடுவதற்கு Motor Grander இயந்திரக் கூலியாக ரூபா.16,000 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்வுக்கு கிடைக்கப்பெற்ற ஆவணங்களின் அடிப்படையில் Motor Grander இற்குப் பதிலாக JCB இயந்திரமே பயன்படுத்தப்படடிருந்தது.

(ii) வீதி நிர்மாணம் தொடர்பான விபரங்களுடன் பெயர் பலகை பொருத்துவதற்கு ரூபா 10,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தும் 2015 யூன் 19 திகதிய களப்பரிசோதனையின் போது பெயர் பலகை வீதிக்கு பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் கணிப்பீட்டு அளவுச்சிட்டையில் கொன்கிறிட்டுக்கு 6mm அளவுடைய 783 kg கம்பிகள் பாவிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தும், கொடுப்பனவு கணிய அளவுச்சிட்டையின் படி 722 kg கம்பி மட்டுமே பயன்படுத்தப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அளவுத் திட்ட பிரமானங்களுக்குப் புறம்பான முறையில் 61 kg கம்பி பயன்படுத்தாமல் வீதி கொன்கிறிட் இடப்பட்டுள்ளமையால் நிர்மாணிக்கப்பட்ட வீதியின் உறுதித்தன்மையில் பாதிப்பு ஏற்படலாம்.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீரமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்ட தற்கமைய சபையில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமை மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான முகாமைத்துவம்
(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஈ) முற்பணங்களின் அறவீடு
(உ) பெறுகை நடைமுறை
(ஊ) ஒப்பந்த நிர்வாகம்